பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

14 02 2025 7 15

வெள்ளிக்கிழமை காலை

ஆகாஷ்வாணி

***TUNE***

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. ரஷ்யா – யுக்ரைன் போரை முடிவுக்குக் கொண்டுவர அமெரிக்க அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப் எடுத்து வரும் முயற்சிகளை வரவேற்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. மணிப்பூரில் குடியரசுத்தலைவர் ஆட்சி அமல்படுத்தப்பட்டுள்ளது தாமதமான நடவடிக்கை என்று காங்கிரஸ் கூறியுள்ளது.

3. ஜம்மு-கஷ்மீரின் பாதுகாப்பு நிலை குறித்து துணைநிலை ஆளுநர் திரு. மனோஜ் சின்ஹா உயரதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

4. தரமான பாரம்பரிய மருந்துகளை உற்பத்தி செய்வதில் இணைந்து செயல்பட வகை செய்யும் ஒப்பந்தத்தில் இந்தியாவும் - இந்தோனேஷியாவும் கையெழுத்திட்டுள்ளன.

5. தேசிய விளையாட்டுப் போட்டிகள் இன்று மாலை வண்ணமயமான கலைநிகழ்ச்சிகளுடன் நிறைவு பெறுகின்றன.

*<u>--- இனி விரிவான செய்திகள் ---</u>*

<<<<>>>>

ரஷ்யா – யுக்ரைன் போரை முடிவுக்குக் கொண்டுவர அமெரிக்க அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப் எடுத்து வரும் முயற்சிகளை வரவேற்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

அமெரிக்காவில் அரசுமுறைப் பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடி அந்நாட்டின் அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப்பை நேற்று வெள்ளை மாளிகையில் சந்தித்துப் பேசினார்.

இந்தப் பேச்சுவார்த்தைக்குப் பின்னர் பிரதமர் வெளியிட்ட சமூக வலைதளப் பதிவில், மோதலை பேச்சுவார்த்தை மூலம் முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்பதுதான் இந்தியாவின் நிலைப்பாடு என்று கூறியுள்ளார்.

ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புடின், யுக்ரைன் அதிபர் திரு. ஜெலன்ஸ்கி ஆகியோரை தாம் சந்தித்துப் பேசியபோதும் இதே கருத்தை வலியுறுத்தியதாகவும் அவர் கூறினார்.

தாமும், அதிபர் ட்ரம்ப்பும் இணைந்து இந்தியா – அமெரிக்கா இடையிலான இருதரப்பு ஒத்துழைப்பு உடன்பாட்டை தொடர்ந்து முன்னேற்றப் பாதைக்கு கொண்டு செல்வது தொடர்பாக பேச்சு நடத்தியதாக தெரிவித்தார்.

இரு நாடுகளுக்கு இடையிலான உறவை வலுப்படுத்துவதில் திரு. ட்ரம்ப் உரிய பங்களிப்பை அளித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்க அதிபர் தேர்தலில் மகத்தான மற்றும் வரலாற்றுச் சிறப்பு மிக்க வெற்றி பெற்றுள்ள திரு. டொனால்ட் ட்ரம்ப்புக்கு திரு. நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்தார்.

இருதரப்பு வர்த்தகத்தை வலுப்படுத்த ஒப்புக்கொள்ளப்பட்டதாக செய்தியாளர்களிடம் பேசிய திரு. ட்ரம்ப் தெரிவித்தார்.

இந்தியாவுக்கு எஃப்-35 ரக போர் விமானங்களை அமெரிக்கா வழங்க உள்ளதாகவும் அவர் கூறினார்.

கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள ராணுவ தளவாடங்களை இந்தியாவுக்கு அமெரிக்கா விற்பனை செய்யவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

முன்னதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி இந்திய அமெரிக்க தொழிலதிபரும், குடியரசு கட்சியைச் சேர்ந்தவருமான திரு. விவேக் ராமசாமியை சந்தித்துப் பேசினார்.

இந்த சந்திப்பின்போது இந்தியா – அமெரிக்கா இடையிலான உறவுகள், கண்டுபிடிப்புகள், உயிரி தொழில்நுட்பம் மற்றும் எதிர்காலத்தை வடிவமைப்பதில் தொழில்முனைவோரின் பங்கு ஆகியவை குறித்து இருவரும் விரிவாக ஆலோசித்ததாக வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர் திரு. ரந்தீர் ஜெய்ஸ்வால் கூறினார்.

<<<<>>>>

மணிப்பூரில் குடியரசுத்தலைவர் ஆட்சி அமல்படுத்தப்பட்டுள்ளது.

மணிப்பூர் ஆளுநரின் அறிக்கையின் அடிப்படையில் அம்மாநிலத்தில் குடியரசுத்தலைவர் ஆட்சி அமல்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கான அறிவிக்கை நேற்று வெளியிடப்பட்டது.

அரசியல் சாசனப் பிரிவு 356வது பிரிவின்-படி இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

மணிப்பூர் நிலவரம் குறித்து கருத்து தெரிவித்துள்ள காங்கிரஸ், கடந்த 10ஆம் தேதி திரு. பிரேன் சிங் தலைமையிலான அரசு மீது பேரவையில் காங்கிரஸ் நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வந்ததாகவும், பிஜேபி சட்டமன்ற உறுப்பினர்களின் ஆதரவையும் முதலமைச்சர் இழந்துவிட்டதையே மத்திய அரசின் நடவடிக்கை எடுத்துக்காட்டுவதாகவும் தெரிவித்துள்ளது.

இதனால் கடந்த 9ஆம் தேதியே முதலமைச்சர் பதவி விலக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது என்றும் அக்கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

சட்டப்பேரவையின் கூட்டத்தொடரை 6 மாதங்களுக்குள் கூட்ட வேண்டும் என்ற நிபந்தனையை மீறி குடியரசுத்தலைவர் ஆட்சி அங்கு அமல்படுத்தப்பட்டுள்ளது என்றும் காங்கிரஸ் குற்றம் சாட்டியுள்ளது.

மணிப்பூரில் குடியரசுத்தலைவர் ஆட்சியை அமல்படுத்தியது மிகவும் தாமதமான நடவடிக்கை என்று திரிணாமுல் காங்கிரஸ் கருத்து தெரிவித்துள்ளது.

அம்மாநிலத்தில் வன்முறை மற்றும் அமைதியின்மை தொடர்வதற்கு மத்திய அரசே பொறுப்பு என்று திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் செய்தித்தொடர்பாளர் திரு. ஜாய்பிரகாஷ் மஜும்தார் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

ஜம்மு-கஷ்மீரின் பாதுகாப்பு குறித்து துணைநிலை ஆளுநர் திரு. மனோஜ் சின்ஹா உயரதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

இந்தக் கூட்டத்தில் பேசிய ஆளுநர், தீவிரவாதத்திற்கு ஆதரவு அளிப்பவர்கள் கடுமையான விளைவுகளை சந்திக்க வேண்டியிருக்கும் என்று எச்சரித்தார்.

ஜம்மு-கஷ்மீரில் இருந்து தீவிரவாதத்தை முற்றிலுமாக அகற்றுவதில் பாதுகாப்புப் படையினர் கவனம் செலுத்த வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

தீவிரவாத செயல்களுக்கு நிதியுதவி மற்றும் ஆதரவு அளிப்போர் மீது கடும் நடவடிக்கை எடுக்குமாறு காவல்துறையை அவர் அறிவுறுத்தினார்

எல்லையைப் பாதுகாப்பதில் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும், பாதுகாப்பு படையினரிடம் ஆளுநர் வலியுறுத்தினார்.

<<<<>>>>

இனி மகா கும்பமேளா குறித்த செய்திகள்...

பிரயாக்ராஜில் செயல்படும் கும்பவாணி பண்பலை அலைவரிசை, கும்பமேளா குறித்த சரியான மற்றும் நம்பகமான தகவல்களை வழங்குவதாக பிரசார் பாரதியின் தலைவர்திரு. நவ்னீத் செகல் தெரிவித்துள்ளார்.

திரிவேணி சங்கமத்தில் நேற்று புனித நீராடிய பின்னர் கும்பவாணி வானொலி நிலையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு அவர் பேசினார்.

பின்னர் பிரயாக்ராஜில் உள்ள ஆகாஷ்வானி மற்றும் தூர்தர்ஷன் நிலையங்களுக்கு சென்று அங்குள்ள ஒலிபரப்பு ஏற்பாடுகளையும் அவர் ஆய்வு செய்தார்.

வேவ்ஸ் ஓடிடி தளத்தையும் ஆய்வு செய்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பிரசார் பாரதியின் நிகழ்ச்சிகள் சுமார் 75 கோடி முதல் 100 கோடி மக்களை சென்றடைவதாகக் கூறினார்.

கும்பமேளா குறித்த அனைத்து தகவல்களையும் உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் உள்ள பக்தர்களை எளிதாக சென்றடையும் வகையில் அதிநவீன தொழில்நுட்பங்கள் பயன்படுத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

உலகப்புகழ் பெற்ற செவ்ரான் நிறுவன் பெங்களூருவில் உலகளாவிய திறன் மையத்தை அமைக்க உள்ளதாக மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

இந்த மையம் எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு துறையில் புதுமைகளை உருவாக்கவும், சிறந்த தொழில்நுட்பம் மற்றும் திறமைகளை வெளிக்கொணரும் இந்தியாவின் செயற்கை நுண்ணறிவு தொலைநோக்குப் பார்வையை நிறைவேற்றுவதாக இருக்கும் என்று சமூக வலைதளத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

தரமான பாரம்பரிய மருந்துகளை உற்பத்தி செய்வதில் இணைந்து செயல்பட வகை செய்யும் ஒப்பந்தத்தில் இந்தியாவும் - இந்தோனேஷியாவும் கையெழுத்திட்டுள்ளன.

இந்த ஒப்பந்தம் பாரம்பரிய மருத்துவத்தில் தர உத்தரவாதத்திற்கான மைல்கல் என்று மத்திய ஆயுஷ் துறை இணையமைச்சர் திரு. பிரதாப்ராவ் ஜாதவ் தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளுக்கு இடையிலான கூட்டு ஒத்துழைப்பு, பாதுகாப்பான மருத்துவம் மற்றும் தரம், அறிவியல்பூர்வமான சோதனை ஆகியவற்றை உறுதிப்படுத்தும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தியாவும் - இந்தோனேஷியாவும் பாரம்பரிய மருத்துவம் தொடர்பான தகவல்களையும், தொழில்நுட்பத்தையும் பரஸ்பரம் பரிமாறிக்கொள்ள முன்வந்துள்ளதாக மத்திய ஆயுஷ் அமைச்சகத்தின் செயலர் திரு. வைத்யா ராஜேஷ் கூறினார்.

<<<<>>>>

தேசிய விளையாட்டுப் போட்டிகள் இன்று நிறைவு பெறுகின்றன.

உத்தராகண்ட் மாநிலம் டேராடூனில் நடைபெற உள்ள நிறைவு விழாவில் உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா சிறப்பு விருந்தினராக கலந்துகொள்கிறார்.

மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா உத்தரகாண்ட் முதலமைச்சர் திரு. புஷ்கர்சிங் தாமி, மேகாலயா முதலமைச்சர் திரு. கான்ராட் சங்மா உட்பட பலரும் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்கிறார்கள்.

கடந்த மாதம் 28ஆம் தேதி தொடங்கிய இந்தப் போட்டிகளில் 32 பிரிவுகளில் நாடு முழுவதிலும் இருந்து 11 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீரர்கள் பங்கேற்றனர்.

பதக்கப்பட்டியலில் 68 தங்கம், 26 வெள்ளி, 27 வெண்கலப் பதக்கங்களைப் பெற்று சர்வீசஸ் அணி முதலிடத்தையும், 54 தங்கம், 71 வெள்ளி, 73 வெண்கலப் பதக்கங்களைப் பெற்று மகாராஷ்டிரா இரண்டாம் இடத்தையும், 48 தங்கம், 47 வெள்ளி, 58 வெண்கலப் பதக்கங்களை வென்று ஹரியானா 3வது இடத்தையும் பிடித்துள்ளன.

27 தங்கம், 30 வெள்ளி, 34 வெண்கலப் பதக்கம் வென்று தமிழக அணி 6வது இடத்தைப் பிடித்துள்ளது.

-------------

தில்லி ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் நிக்கி பூனாச்சா, ஜிம்பாப்வேயின் கட்னி ஜான்லாக் இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

நேற்று நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை, 6-3, 2-6, 10-5 என்ற செட் கணக்கில் ஜப்பானின் **Kaito – Shintaro** இணையை வென்றது.

-------------

துனீஷியாவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Diva Batia** – கிரீஸின் **Sapfo** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

நேற்று நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை, 5-7, 6-2, 10-6, என்ற செட் கணக்கில் ஃபிரான்சின் **Sarah – Daphnee** இணையை வென்றது.

**<<<<The End>>>>**